மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : பாயின்ட் ஆப் ஆர்டர்............ கனம் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஒரு வார்த்தை சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. திரு. கோவை செழியன்............

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I have given notice of an adjournment motion on the same subject. I want a clarification from the Hon. Chief Minister......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : க்ளாரிபிகேஷன் ஒன்றும் கிடையாது.

(4) கவன ஈர்ப்பு

முதல் இரண்டாம் நிலை தமிழ்ப் பண்டிதர்களை ஒரே நிலையாக இணைப்பதில் உள்ள தாமதம் குறித்து.

THIRU KOVAI CHEZHIYAN : Sir, I call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely the inordinate delay on the part of the Government in merging, the Grade I and Grade II Tamil Pandits into a single category.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அரசு அ. பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள முதல் நிலை தமிழாசிரியர் பதவிகளில் நியமனம் அல்லது பதவி உயர்வு பள்ளிக் கல்வி இணை இயக்குநரால் செய்யப்படுகிறது. அரசு பி. பிரிவு பள்ளிகளில் அத்தகைய நியமனம் அல்லது பதவி உயர்வு முதன்மைக் கல்வி அலுவலர்களால் செய்யப்படுகிறது.

அரசு ஆணை 63–நாள் 17—1—1974–ன் படி அரசுப் பள்ளிகளில் பணிவரன் முறை செய்யப்பட்ட எல்லா இரண்டாம் நிலை தமிழாசிரியர்களும் முதல் நிலைத் தகுதி அடிப்படையில் முதல் நிலை தமிழாசிரியர்களாக ஏற்கெனவே நியமனம் செய்யப்பட்டு முதல் நிலை ஊதியம் பெற்று வருகின்றனர்.

அரசு (அ. பிரிவு) பள்ளிகளில் உள்ள தற்காலிக இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களையும் மற்றும் இரண்டாம் நிலையில் தகுதிகாண் பருவம் முடிக்கப் பெறுதவர்களையும் முதல் நிலை பதவியில் அமர்த்துவது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநர் சில விளக்கங்களை அரசிடம் கோரியிருந்தார். இது அரசின் ஆய்வில் உள்ளது. விரைவில் விளக்கங்கள் அனுப்பப்படும்.

மதுரை தமிழ்ச் சங்கம் வழங்கும் புலவர் பண்டிதர் சான்றிதழ் பெற்றவர்களை அரசு (அ. பிரிவு) பள்ளிகளில் முதல் நிலை பதவியில்

அமர்த்துவது குறித்தும் சில விளக்கங்களை இயக்குநர் கோரியிருந்தார். அவர்களையும் முதல் நிலைப் பதவியில் பதவி உயர்வு அளிக்கலாமென அண்மையில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

அரசு பி. பிரிவு பள்ளிகளைப் பொறுத்த வரையில் ஒரு 6 நபர்கள் தவிர மற்றெல்லோருக்கும் முதல் நிலைப் பதவிகள் அளிக்கப்பட்டுவிட்டன. இந்த ஆறு பேர்களில் பணிப் பதிவேடுகள் கிடைக்கப் பெற்றதும் அவர்களது பதவி உயர்வும் கவனிக்கப்படும் எனவும் தெரியவருகிறது.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, அந்த உத்தரவு வந்ததற்குப் பின்னாலும் கூட, சில தமிழ் ஆசிரியர்களுக்கு அவர்களுக்குச் சேர வேண்டிய அரியர்ஸ் பணம் இன்னும் கொடுக்கப் படாமல் இருக்கிறது. அதை உடனடியாக அனுப்புவதற்கு அரசு என்ன முயற்சி எடுத்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அரசு ஆணை வழங்கிவிட்டது. 6 பேர்களுக்குத்தான் கொடுக்கப்படவில்லை. அந்த 6 பேர்களுக்கும் பணிப் பதிவேடு கிடைக்கவில்லை. அது வந்ததற்குப் பிறகு பதவி உயர்வு தரப்படும். மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல் யாருக்காவது அரியர்ஸ் வராமல் இருந்தால், அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அது கவனிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(5) 1975–76 ஆம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

(அ) நிதிக்கோரிக்கை எண் 36—பாசனம்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டடங்கள்

(இ) நிதிக்கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும்.

(ஈ) நிதிக் கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும்.

(உ) நிதிக் கோரிக்கை எண் 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு.

(ஊ) நிதிக்கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

(எ) நிதிக் கோரிக்கை எண் 52—பொதுப் பணித் துறை கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு.

(ஏ) நிதிக் கோரிக்கை எண் 53—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் நமக்கு இருப்பது $2\frac{1}{2}$ மணி நேரம்தான். மாண்புமிகு அசைமச்சருக்கு எவ்வளவு நேரம் வேண்டும் ?